DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC** 17/2024 |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : டாக்டர்.வேலம்மாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th February 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.11.2013 ம் தேதி நான் பணியில் இருந்தபோது அதிகாலை 2.45 மணிக்கு ஜெயலட்சுமி என்பவரை அவரது கணவர் சரவணன் என்பவர் மருத்துபரிசோதனைக்காக என்னிடம் கூட்டிவந்தார். காலை 1.30 மணியளவில் மலையான்குளம் விலக்கில் உள்ள இன்ஜினியர் மாரியப்பன் நாயக்கர் தோப்பில் வைத்து அடையாளம் தெரிந்த 4 ஆண்நபர்கள் இரும்புகம்பி, கத்தி, சூரி கொண்டு தாக்கியதாக ஜெயலட்சுமி என்னிடம்கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன

1. 5x2 செமீ x சதையளவு சிதைவு காயம் தலையின் இடதுபக்கம் காணப்பட்டது.

2. இடது சுண்டுவிரலில் 3x2x1 செமீ அளவிலான சிதைவு காயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு அவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரிக்கு மேல்சிக்சைக்காக அனுப்பப்பட்டார். 02.11.2013 முதல் 09.11.2013 வரை அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டார். அங்கிருந்து பெறப்பட்ட நுண்கதிர் படத்தில் எந்த விதமான எலும்புமுறிவும் காணப்படவில்லை. எனவே 1,2 காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்றுஅளித்தேன். ஜெயலட்சுமியின் **காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

02.11.2013 ம் தேதி அதிகாலை 2.55 மணிக்கு சரவணன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். காலை 1.30 மணியளவில் மலையான்குளம் விலக்கில் உள்ள இன்ஜினியர் மாரியப்பன் நாயக்கர் தோப்பில் வைத்து அடையாளம் தெரிந்த 4 ஆண்நபர்கள் இரும்புகம்பி, கத்தி, சூரி கொண்டு தாக்கியதாக சரவணன் என்னிடம் கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலதுபக்க நாடிக்கு அருகில் 2x2x1 செமீ அளவில் சிதைவு காயம் காணப்பட்டது.
2. இடது முழங்கை முட்டிக்கு அருகில் 4x4 செமீ அளவில் வீக்ககாயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு அவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரிக்கு மேல்சிக்சைக்காக பரிந்துரைக்கப்பட்டார். அவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சை செல்லவில்லை. அதனால் அங்கிருந்து எந்த மருத்துவ ஆவணமும் கிடைக்கப் பெறவில்லை. எனவே காயச்சான்று அளிக்க இயலவில்லை என்று கருத்துரை வழங்கினேன். **சரவணனின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

ஜெயலட்சுமி மற்றும் சரவணன் ஆகியோர்களுக்கு சேர்த்து ஒரு விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. அவர்களுக்கு இருவிபத்து பதிவேடுகள் தனித்தனியாக பதிவுசெய்யப்பட்டன. ஜெயலட்சுமி மற்றும் சரவணன் என்னிடம்சிகிச்சைக்கு வந்தபோது சுயநினைவுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இருவரும் என்னிடம் அவர்களை அடையாளம் தெரிந்த 4 ஆண் நபர்கள் தாக்கியதாக கூறினார்கள் என்றால் சரிதான். ஜெயலட்சுமிக்கு ஏற்பட்ட

இருகாயங்களும் சிதைந்த காயங்கள் என்றால் சரிதான். மேற்படி சிதைந்த காயங்களில் ரத்தக்கசிவு காணப்பட்டதா என்றால் அவ்வாறு ரத்தக்கசிவு காணப்பட்டதாக அ.சா.ஆ 2 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. ஜெயலட்சுமிக்கு முதலுதவி சிகிச்சை மற்றும் நான் அளித்தேன் என்றாலும், அவருக்கு மேல்சிகிச்சை திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் கொடுக்கப்பட்டது என்றாலும் சரிதான். ஜெயலட்சுமி மற்றும் சரவணன் ஆகியோர் கரடுமுரடான பகுதியில் இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது கீழே விழுந்தால் நான் முதல்விசாரணையில் கூறிய காயங்கள் அவர்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**